செய்தி வெளியீடு எண்: 054 நாள்: 22.01.2020

## செய்தி வெளியீடு

தற்போது நிலவி வரும் பண்ணைப் பணியாளர்களின் பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு, பண்ணை இயந்திரமயமாக்குதலை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது. தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்குவதோடு, வட்டாரம் மற்றும் கிராம அளவில் வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைப்பதற்கும் தமிழ்நாடு அரசு மானியம் அளித்து வருகிறது. மேலும், கரும்பு சாகுபடியினை ஊக்குவிப்பதற்காக, கரும்பு விதைப்பு முதல் அறுவடை மற்றும் அறுவடைக்குப்பின் சோகை மேலாண்மை போன்ற பல்வேறு பணிகளை இயந்திரமயமாக்குவதற்கு கரும்பு சாகுபடிப் பணிகளுக்கான பண்ணை இயந்திர வாடகை மையம் துவங்குவதற்கு 40 சதவிகித மானியம் வழங்கி, தமிழ்நாடு அரசு கரும்பு விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது.

இவ்வகையான கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்களை முன்னோடி விவசாயிகள் மட்டுமல்லாது தொழில்முனைவோர்களும் அமைக்கலாம். டிராக்டர், சுழற்கலப்பை, சட்டிக்கலப்பை, கரும்பு கணுவெட்டும் கருவி, விசைக்களையெடுப்பான், கரும்பு அறுவடை இயந்திரம், இன்பீல்டர், கரும்பு சோகை துகளாக்கும் கருவி, கரும்பு கட்டை சீவும் கருவி போன்ற கரும்பு சாகுபடிக்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு ஆகும் ரூ.1 கோடியே 50 இலட்சம் மொத்த திட்ட மதிப்பில் 40 சதவிகித மானியமாக அதிகபட்சம் ரூ.60 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இந்த மானியத் தொகையானது, தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் பயனாளியின் மானிய இருப்பு நிதி கணக்கில் 4 ஆண்டுகள் பராமரிக்கப்படும். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, இயந்திரங்கள் இருப்பினை சரிபார்த்து, அவரது வங்கிக் கணக்கில் மானியத் தொகை வரவு வைக்கப்படும். தமிழகத்தில் இதுவரை காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, ஈரோடு, தஞ்சாவூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 11 கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நடப்பு 2019–2020 ஆம் ஆண்டிலும் 13 கரும்பு சாகுபடி வேளாண் இயந்திர வாடகை மையங்கள் நிறுவ, திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அரசு ரூ.6.00கோடி நிதியினை ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்திற்கான பயனாளிகள் கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் ஒத்துழைப்புடன் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்படுவார்கள். நடப்பு ஆண்டில் கரும்பு இயந்திர வாடகை மையங்கள்

அமைப்பதற்கு, இதுவரை, 10 முன்னோடி விவசாயிகள் / தொழில் முனைவோர் முன்வந்துள்ளனர்.

இவ்வாடகை மையங்கள் திறம்பட செயல்பட ஏதுவாக சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலையின் நிர்வாக இயக்குர்/தலைமை நிர்வாகி, தொழில்முனைவோர் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளருடன் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும். இந்த மையத்தில் உள்ள இயந்திரங்கள் கரும்பு விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கப்படும். இம்மையங்களை அமைக்க முன்வருபவர்கள் தங்களின் விருப்பத்திற்கிணங்க, வேளாண்மைப் பொறியியல் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து தங்களுக்குத் தேவையான மாடல்களை தேர்வு செய்து கொள்ளலாம். இதற்கான வாடகைத் தொகை சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலை மூலம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கரும்புத்தொகையிலிருந்து பிடித்தம் செய்து வாடகை மையத்திற்கு வழங்கப்படும்.

எனவே, அரசு வழங்கும் மானியத்தை பயன்படுத்தி கரும்பு சாகுபடி இயந்திர வாடகை மையம் அமைக்க விரும்புவோர் உடனடியாக வேளாண்மை பொறியியல் துறையின் வருவாய் கோட்ட உதவிச் செயற் பொறியாளர் அல்லது மாவட்ட அளவில் செயற் பொறியாளர் அலுவலகங்களை அணுகி, விண்ணப்பித்து பயன் பெறலாம்.

**வேளாண் உற்பத்தி ஆணையர் (ம)**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**